ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2300/25 - 2022 ඔක්තෝබර් මස 06 වැනි බ්‍රහස්පතින්දා - 2022.10.06

*2300/25 ஆம் இலக்கம் - 2022 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 06 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

***2005 ஆம் ஆண்டின் 06 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலம் திருத்தப்பட்டவாறான 2002 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, பெறுமதி சேர் வரிச் சட்டத்தின் 2அ பிரிவின் கீழான கட்டளை***

*2005 ஆம் ஆண்டின் 06 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலம் திருத்தப்பட்டவாறான 2002 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, பெறுமதி சேர் வரிச் சட்டத்தின் 2அ பிரிவின் கீழ் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக் கொண்டு நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க ஆகிய நான், இக் கட்டளையின் மூலம், 2022, ஒகத்து 31 ஆந் திகதிய 2295/08 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் இறுதியாகத் திருத்தப்பட்ட 2022, மே 31 ஆந் திகதிய 2282/26 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்பட்ட கட்டளையை, 2022, ஒற்றோபர் 07 ஆந் திகதி முதல் பயன்வலுப்பெறும் வகையில், 1 ஆம் பந்தியின் (அ) துணைப் பந்தியைப் பின்வரும் பந்தியைக் கொண்டு திருத்தியமைக்கின்றேன்.*

"(அ) (i) *2018, நவெம்பர் 01 ஆந் திகதிய 2095/20 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலின் அட்டவணையில் முறையே நிரல் I மற்றும் II ஆகியவற்றில் இ. மு. குறியீட்டின் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ளதும் விவரணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதுமான பொருட்களின் இறக்குமதி தொடர்பாக, அத்தகைய அட்டவணையின் நிரல் III இல் தொடர்புடைய பதிவில் குறிப்பிடப்பட்டுள்ள விகிதத்தில்;*

(ii) *இ.மு. குறியீடு 9619.00.10 இன் கீழ் சுகாதாரத் துவாய்கள் (* pads*) மற்றும் ரெம்பொன்களின் இறக்குமதி மற்றும்/அல்லது விநியோகம் தொடர்பாக பூஜ்ஜிய சதவீதத்தில் (0%); மற்றும்*"

**ரணில் விக்கிரமசிங்க,**
*நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும்*
*தேசிய கொள்கைகள் அமைச்சர்.*

*நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும்*
*தேசிய கொள்கைகள் அமைச்சு,*
*கொழும்பு 01,*
*2022, ஒற்றோபர் 06.*

EOG *10 - 0163*